<u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6</u>
<u>மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு, மார்ச்/ஏப்ரல் 2018</u>

<u>தனித்தேர்வர்கள் தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகளை இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளுதல் தொடர்பான</u>

## <u>செய்திக் குறிப்பு</u>

நடைபெறவுள்ள மார்ச்/ஏப்ரல் 2018, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுத, விண்ணப்பித்த தனித்தேர்வர்கள் (துட்கல் உட்பட) 02.02.2018 முதல் **<u>www.dge.tn.gov.in</u>** என்ற இணையதளத்தின் மூலம் தேர்வுக் கூட நுழைவுச் சீட்டுகளை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**<u>www.dge.tn.gov.in</u>** என்ற இணையதளத்திற்குச் சென்று முதலில் **"HALL TICKET DOWNLOAD"** என்ற வாசகத்தினை '**Click**' செய்தால் தோன்றும் பக்கத்தில் உள்ள **"HIGHER SECONDARY SECOND YEAR EXAM MARCH/APRIL 2018 – PRIVATE CANDIDATE – HALL TICKET PRINT OUT**" என்ற வாசகத்தினை '<u>Click</u>' செய்து தோன்றும் பக்கத்தில் தங்களது <u>விண்ணப்ப எண் (Application Number)</u> மற்றும் <u>பிறந்த தேதியினைப் (Date of Birth)</u>, பதிவு செய்தால், அவர்களுடைய தேர்வுக் கூட அனுமதிச் சீட்டு திரையில் தோன்றும். அதனைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மொழிப் பாடங்களில் கேட்டல் / பேசுதல் திறன் தேர்வு, சிறப்பு மொழி (தமிழ்) பாடத்தில் கேட்டல்/பேசுதல் திறன் தேர்வு மற்றும் செய்முறைத் தேர்வுக்கான தேதி குறித்த விவரத்தைத் தனித்தேர்வர்கள் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தேர்வு மையத்தின் முதன்மைக் கண்காணிப்பாளரை அணுகி அறிந்து கொள்ள வேண்டும். உரிய தேர்வுக்கூட அனுமதிச் சீட்டின்றி எந்த ஒரு தேர்வரும் தேர்வெழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

மார்ச்/ஏப்ரல் 2018 பொதுத் தேர்விற்கான கால அட்டவணையை **<u>www.dge.tn.gov.in</u>** என்ற இணையதளத்திற்கு சென்று அறிந்து கொள்ளலாம்.

**ஒம்/-**

**இயக்குநர்**

**நாள்:31.01.2018**
**இடம்: சென்னை – 600 006.**